**செய்தி வெளியீடு எண்:587** **நாள் : 19.11.2014**

# செய்தி வெளியீடு

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயல்பாடுகள் குறித்தும் மற்றும் துறை திட்டப்பணிகளின் செயல்பாடுகள் குறித்தும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ். அப்துல் ரஹீம்** அவர்கள் தலைமையில் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் அலுவலர்களின் கூட்டம் **19.11.2014** அன்று சென்னையில் நடைபெற்றது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினர் கல்வி, சமூகம் மற்றும் பொருளாதார ரீதியாக மேம்பட பல்வேறு ஆக்கபூர்வமான நலத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் இத்துறையின் செயல்பாடுகளை மேலும் முனைப்பாகவும், செம்மையாகவும், அதே சமயத்தில் உரிய நேரத்திலும் மக்களுக்கு சென்றடையும் விதத்தில் செயல்படுத்திடவும், தமிழக அரசின் உன்னத சமத்துவ கொள்கையை முழுமையாக எய்திட அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் மிகவும் கடுமையாக செயல்பட்டு இத்துறை திட்டப்பணிகளின் பயன்பாடுகள் மக்களிடையே சென்று சேர்ப்பதற்கு பாடுபட வேண்டும் என்று வருகை புரிந்த அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

வாடகை கட்டங்களில் இயங்கிவரும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக தகுதியான நிலங்களை தேர்வு செய்யவும் அனைத்து விடுதிகளையும் மாதந்தோறும் ஆய்வு செய்து அவை நல்ல முறையில் செயல்படவும், மாணவர்களுக்கு சுகாதாரமான இருப்பிடம் மற்றும் தரமான உணவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும், அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்களும் முனைப்புடன் செயல்பட வேண்டும் என மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தவிர மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை உரிய காலத்தில் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் எனவும், பிவ, மிபிவ மற்றும் சீம இன மக்களுக்கு விலையில்லா வீட்டு மனை பட்டா வழங்குதல், விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி வழங்குதல் மற்றும் நரிக்குறவர் / சீர்மரபினர் வாரிய உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளவும், டாப்செட்கோ மற்றும் டாம்கோ மூலம் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை இன மக்களுக்கு வழங்கப்படும் கடன் உதவி திட்டங்கள் விரைவுப்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்து இத்துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்து அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்கினார்.

ஆய்வுக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் க.அருள்மொழி, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை முதன்மைச் செயலர்/ஆணையர் திரு.அஷோக்டோங்ரே, இ.ஆ.ப., சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் திரு அ. முஹம்மது அஸ்லாம், இ.ஆ.ப., பொதுப் பணித்துறை அலுவலர்கள், மாவட்ட அலுவலர்கள் மற்றும் இணை இயக்குநர், (க.சீ) மதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசு முதன்மைச் செயலர்
பிற்படுத்தப்பட்டோர் நலம்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**